தமிழ் வருடாந்திர மாநாட்டு மெதடிஸ்ட் பெண்கள்

ஜெபம் மற்றும் சுய வெறுப்பு வாரம்
(19-25 ஆகஸ்ட், 2018)

---

25 ஜுலை, 2018

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே,

நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள்!

ஜெபம் மற்றும் சுய வெறுப்பு 2018க்கான குறிப்புகள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

இணைக்கப்பட்டுள்ள குறிப்புகளை பயன்படுத்தி ஜெபத்தோடு இந்த நாளை அனுசரியுங்கள், மற்றும் ஆராதனை வேளையில் காணிக்கை எடுக்கப்படும். இந்த காணிக்கை பின்வரும் காரியங்களுக்கு பயன்படுத்தப்படும்:

1. உலு கிளாங் மெதடிஸ்ட் பெண்கள் மைய மேம்பாட்டிற்கு
2. பொது மாநாட்டு மெதடிஸ்ட் பெண்கள் ஊழியங்களுக்கு

காணிக்கைக்கான காசோலைகள் **'AEC OF THE METHODIST CHURCH IN MALAYSIA"** க்கு குறிப்பிடப்படவேண்டும், காசோலைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி :

**Mrs. Margaret Chelliah**
The Treasurer , TAC MW
No. 3, Jalan Sri Siantan 43,
Kawasan 2, Taman Sri Andalas,
41200 Klang, Selangor.

அர்த்தமுள்ள ஜெபம் மற்றும் சுய வெறுப்பு 2018 வாரத்தை அனுசரிக்க வாழ்த்துக்கள்!

ஆசீர்வாதமான ஆராதனைக்கு வாழ்த்துக்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

' கிறிஸ்துவை அறிந்துக்கொண்டு அவரை பிரசித்திப்படுத்துங்கள் '

அவரது சேவையில்,

மார்கிரேட் நெல்சன்
ஆவிக்குரிய வாழ்க்கை ஒருங்கிணைப்பாளர்
த.வ.மா. மெதடிஸ்ட் பெண்கள்

நாள் 1:

தலைப்பு: அழைப்பின் பரிசுத்தம்
நோக்கம்: வேதாகம காலத்திலும் நமது வாழ்க்கையிலும் தேவனின் அழைப்பை ஆராய்தல்.
வேத வாசிப்பு: யாத்திராகமம் 3:1-8a நியாயாதிபதிகள் 6:11-16, 22-24 எஸ்தர் 4:9 அப்போஸ்தலர் 9:36-42

தியானம்:
நான்கு வித்தியாசமான வேலைக்கு தேவன் ஆட்களை அழைத்ததை பற்றி இந்த வேதாகம பகுதிகள் உதாரணமாக காட்டுகின்றன:

1) மோசே அவனது ஜனங்களை கட்டுகளிலிருந்து நடத்தியது,
2) கிதியோன் தனது படையை வல்லமையான எதிரிக்கு முன்பாக வழிநடத்தியது.
3) எஸ்தர் தனது ஜனங்களுக்காக தன் வாழ்க்கையை பணயம் வைத்தது
4) தொற்காள் அல்லது தபீத்தாள் தனது சமுதாயத்துக்கு சேவை செய்தது

தேவன் சிலரை குறிப்பிட்ட வாழ்க்கைமுறைக்கு அழைக்கிறார், மேலும் சிலரை ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு அல்லது வேலைக்கு அழைக்கிறார். ஒவ்வொருவரும் தன் பரிசுத்த அழைப்புக்கு பின்செல்ல வேண்டும், நம்பிக்கையான பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும். தேவன் இந்த மனிதர்களிடம் பெரும் நம்பிக்கை வைத்துள்ளார், அவர்களது தலைமைத்துவத்திலும், தங்களது அழைப்புக்கு அவர்களின் ஆயத்தத்திலும் மற்றும் தாக்கத்திலும் நம்பிக்கை கொண்டுள்ளார்.

மோசேயின் அழைப்பில் தேவன் தூர தேசத்தில் அவனிடத்தில் வருகிறதை காண்கிறோம். 80 வயதில் தேவனுடைய பிரசன்னத்தை எரிகிற முட்செடியில் சந்தித்தான், அது அவனது வாழ்க்கையை மாற்றியது. தேவன் மோசேக்கு அற்புதமான விதத்தில் தன்னை காண்பித்தார், அவர் காணப்பட்ட அந்த இடம் பரிசுத்த ஸ்தலமாகியது. மோசே பரிசுத்த பூமியில் நின்றதால் அவனது பாதரட்சைகளை கழற்றிப்போடுமாறு கூறப்பட்டான். தேவனுடைய அழைப்பை அவருடைய குரலிலிருந்து அல்லது சூழ்நிலையிலிருந்து, அல்லது வாய்ப்பிலிருந்து அறிந்துகொள்வது – பரிசுத்த ஸ்தலமாக ஏற்றுக்கொள்வது.

கிதியோன் படைத்தலைவனாகவோ அல்லது சாதாரண ஒரு தலைவனாகவோ வர தகுதியற்றவன். ஆனாலும் தேவனுடைய தூதன் அவனை சந்தித்து, அவனை தலைவனாக அழைத்தார். கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிப்பதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதை போரடிக்கும் போது கர்த்தருடைய தூதனானவர் அவனுக்கு தரிசனமானார். கிதியோன் ஆண்டவருடைய தேர்வை குறித்து கேள்விகள் எழுப்பினான், தேவனுடைய பலம் அவனது பெலவீனத்திலே விளங்கும் என உறுதியளிக்கப்பட்டான். அவ்வுறுதி கொடுக்கப்பட்டதும், கர்த்தருடைய தூதனானவர் அவனுடைய கண்களுக்கு மறைந்துபோனார், கிதியோன் தேவன் தன்னை அழைத்ததை உணர்ந்தான். அவ்விடத்தில் ஆண்டவர் தனக்கு காணப்பட்டதால் அந்த இடத்தை பரிசுத்த ஸ்தலமாக்கி அவ்விடத்திற்கு அடையாளமாக ஒரு பலிபீடத்தை அங்கு கட்டினான்.

மொர்தெகாயின் மூலம் எஸ்தர் அழைக்கப்பட்டாள். எபிரெயர் அனைவரையும் அழிக்கும் திட்டத்தை அறிந்த மொர்தெகாய், எஸ்தர் இதில் தலையிட வேண்டும் என்று அவளுக்கு சொல்லி அனுப்புகிறான். தனது உயிருக்கு இது ஆபத்தை கொண்டுவரும் என எஸ்தர் கூறியனுப்பினாள், ‘‘இப்படிபட்ட காலத்துக்குத்தான்’’ நீ உதவியாயிருக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம் என மொர்தெகாய் ஞாபகப்படுத்தினான். எஸ்தர் சவாலை ஏற்றுக்கொண்டு சொந்த திட்டத்தை தீட்டுகிறாள். அவள் உபவாசிக்கும்படி ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குகிறாள், ஜனங்களுடைய ஆதரவைப் பெற்று, தனது நோக்கத்தை அடைய திட்டம் தீட்டுகிறாள்.

தொற்காள்/தபீத்தாளுடைய வாழ்க்கை தன் சமுதாயத்திற்கு சேவை செய்ய அழைக்கப்பட்ட ஒருவரின் கதை. அவள் நோய்வாய்ப்பட்டு இறந்தபொழுது அவளது சமுதாயம் அவள் இழப்புக்காக துக்கப்பட்டது, அவளது பிரேதத்தை மிக மரியாதையாக நடத்தினது. பேதுரு இதை கேள்விப்பட்டு, உடனடியாக வந்து அவளை உயிரோடு எழுப்பி அவளுடைய சமுதாயத்தோடு திரும்ப சேர்த்தான். அழைக்கப்பட்ட இவர்களின் அழைப்பு தங்களை சுற்றியிருக்கும் தேவையை சந்திக்கும்படியாக அமைந்தது: மோசே அடிமைகளாயிருந்த எபிரெயருக்காய், கிதியோன் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த எபிரெயருக்காய், எஸ்தர் அழிப்பதற்கு அச்சுறுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ஜனங்களுக்காய், தொற்காள் தேவையோடிருக்கும் தன் சமுதாயத்திற்காய். அதேபோல் இயேசுவின் சீஷர்கள் நற்செய்தியை அறிவிக்கவும், அவருடைய மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் பின்னர் சுவிசேஷத்தை அறிவிக்கவும் அழைக்கப்பட்டனர். அவர்கள் வியாதியஸ்தர்களை சுகமாக்கவும், மரித்தவர்களை உயிரோடெழுப்பவும், பிசாசுகளை விரட்டவும் மேலும் பல காரியங்களுக்காகவும் அழைக்கப்பட்டனர்.

அழைப்புகள் பல விதமாக வரக்கூடும், சிலருக்கு அது வாழ்நாள்முழுவதற்கும், சிலருக்கு வாழ்க்கையின் பின்பகுதியிலும், மேலும் சிலருக்கு அது சில காலகட்டத்துக்கு மட்டும். கர்த்தரை நேசிக்கவும் பிறரை நேசிக்கவும் கிறிஸ்துவின் அழைப்புக்கு மறுமொழி கொடுப்போம்.

விவாதிக்க:

1. எந்த வகையில் நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டதை உணருகிறீர்கள்?
2. உங்களது வாழ்க்கையில் அந்த அழைப்புக்கேற்றவாறு நீங்கள் எவ்வாறு வாழ்ந்துக்கொண்டிருக்கிறீர்கள்.

நாள் 2:

தலைப்பு: கூடி வருதலின் பரிசுத்தம்
நோக்கம்: நாம் கூடிவரும் இடம் எவ்வாறு அன்பினாலும், கரிசனையாலும் நீதியாலும் பரிசுத்தமாகிறது.
வேத வாசிப்பு: 1 இராஜாக்கள் 8:1-13, 22-53 மத்தேயு 18:20 அப்போஸ்தலர் 2:42

தியானம்:
எருசலேமில் சாலொமோன் கட்டிய ஆலயத்தின் பிரதிஷ்டைக்கு யூதர்கள் கூடினதையும் (பழைய ஏற்பாடு), ஆதி திருச்சபையில் கிறிஸ்தவர்களாய் கூடினதையும் (புதிய ஏற்பாடு), இந்த வேதபகுதியில் காணலாம். 1 இராஜாக்களில் பல வருட போராட்டத்துக்கு பின் எபிரெயர்கள் தேசமாக வாக்களிக்கப்பட்ட இடத்தை சேர்கிறார்கள். தாவீது மேய்ப்பனாய் ஆரம்பிக்கிறான், பின்னர் போர் வீரனாகிறான், அதன்பின் நேசத்துக்குரிய ராஜாவாகிறான். அவனுடைய வாரிசாகிய சாலொமோன், அவர்கள் தொழுதுகொள்ள கூடும் இடமான தேவாலயத்தில் ஆண்டவருடைய பிரசன்னம் வர அழைக்கிறான். அவனுடைய நீண்ட பிரதிஷ்டை 1 இராஜாக்கள் 8:22-53 காணலாம், அவனது ஜனங்களின் சரித்திரத்தை கூறுகிறான் மேலும் ஆண்டவருடைய இரக்கத்தை நாடுகிறான். ஆண்டவர் சாலொமோனின் ஜெபத்தைக் கேட்டு அவனுக்கு பதிலளிக்கிறார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எங்கெல்லாம் கூடுகிறோமோ அங்கெல்லாம் இயேசு நம் மத்தியில் இருப்பதாக வாக்குகொடுக்கிறார். நாம் கூடுவது தொழுவதற்கு, ஜெபத்திற்கு, ஆராய்ச்சிக்கு, உதவிக்கு, பாதுகாப்புக்கு, ஆதரவுக்கு, சாட்சிக்கு மற்றும் வேறு நோக்கத்திற்காகவும் இருக்கலாம். இயேசுவின் ஊழிய சமயத்தில் இது சீஷர்களின் அனுபவமாக இருந்தது. ஜனங்கள் அவரது போதனையை கேட்க கூடினார்கள், ஆனால் பின்னர் 5000 பேருக்கு அவர் போஜனம் கொடுத்தார், நினைவிருக்கிறதா? அல்லது இயேசு போதிக்கும்போது கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள், வீட்டின் மேல் ஏறி தட்டோடுகள் வழியாய் அவருக்கு முன்பாக தங்கள் நண்பனை வைத்தார்கள், அவர் அவனை சொஸ்தமாக்கினது?

மேல் அறையில் பரிசுத்த ஆவியானவர் தோன்றினதும், அவர்கள் போதிக்கவும், ஜெபம் பண்ணவும், அப்பம் பிட்குதலுக்கும் ஒருமித்திருக்க தங்களை ஒப்புக்கொடுத்தனர். வல்லமையான காரியங்கள் நிகழ்ந்தன. வெளியே ஸ்திரீகள் கூடியிருந்தனர். பவுலும் சீலாவும் அவர்களிடம் பேசினார்கள். அந்த ஸ்திரீகளில் ஒருத்தி லீதியாள், தேவனை வணங்குகிறவள் என்று வர்ணிக்கப்படுகிறாள். அவள் ஒரு வியாபாரி, அவர்கள் பேசுவதை கேட்டுக்கொண்டிருக்கிறாள். அந்தக் கூட்டத்தில் பவுலின் வார்த்தையினால் ஆண்டவர் அவளை தொட்டார், அவளும் அவள் குடும்பத்தாரும் ஞானஸ்நானம் பெற்றனர். அப்போஸ்தலர் 16:40, பவுலும் சீலாவும் கைது செய்யப்பட்டு விடுதலையான பின், லீதியாள் வீட்டிற்கு வருகின்றார்கள் என வாசிக்கின்றோம். இந்த சாதாரண ஒன்றுகூடல், அவளது வாழ்க்கையையும் மற்றவர்களது வாழ்க்கையையும் மாற்றியது.

அப்போஸ்தலர் 16ல், குறி சொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு ஆதாயத்தை உண்டாக்கின ஒரு சிறு பெண்ணிடமிருந்து அசுத்த ஆவியை துரத்தினதால் பவுலும் சீலாவும் பிரச்சனையில் மாட்டிக்கொண்டனர். இதனால் அவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். நள்ளிரவில், அவர்கள் இருவரும் ஜெபம்பண்ணி தேவனை துதித்துப்பாடினார்கள். இந்த இரு நிகழ்வுகளும் விசுவாச கூட்டங்கள், நமது மெதடிஸ்ட் பெண்கள் கூட்டங்கள் உட்பட. சிறையில் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்த சமயம், பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகள் திறவுண்டன, எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோய் விடுவிக்கப்பட்டனர். சிறைச்சாலைக்காரன் கலக்கமடைந்து தன்னை கொலை செய்துகொள்ள போனான், ஆனால் பவுலும் சீலாவும் அவனை தடுத்தனர். அவனும் அவன் வீட்டாரும் விசுவாசிகளானார்கள். இவையெல்லாம் நடக்க காரணம், ஒரு பரிசுத்த ஸ்தலம் உருவாக இரண்டு நபர்கள் சிறைச்சாலையில் துதித்து ஆராதித்ததுதான்.

விவாதிக்க:

1. நீங்கள் கூடும்போது என்ன நடக்கும்? அன்புக்கும் உபசரிப்புக்கும் ஒரு பரிசுத்த இடத்தை நீங்கள் உருவாக்குகிறீர்களா? ஜெபத்திற்கும் பாமாலைகள் பாடவும்? ஒன்று சேர்ந்து கற்றுக்கொள்ள, ஒருவருக்கொருவர் ஆதரவு கொடுத்து, என்ன நடந்திருந்தாலும் உற்சாகப்படுத்துவதற்கு?

நாள் 3:

தலைப்பு: விட்டுச்செல்லும் சுவட்டின் பரிசுத்தம்

நோக்கம்: மெதடிஸ்ட் பெண்கள், சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் உருவாக்கி பின்னர் விட்டுச்சென்ற சுவட்டை புரிந்துகொள்தல்.

வேத வாசிப்பு: எண்ணாகமம் 27:18-23, யோவான் 14:12, 2இராஜாக்கள் 2:1-18, 2தீமோத்தேயு 1:5-6

தியானம்:

சுவடு என்றால் நம் சிந்தனைக்கு தோன்றுவது நம் மரபு வழியாய் வரும் காரியங்கள் தான். பெரும்பாலாக இது சொத்து காரியங்கள், தற்கால வார்த்தைபடி பணம், உடைமை, வசமான பொருட்கள், நிலம் மற்றும் நமக்கு சொந்தமான அனைத்தும்.
எண்ணாகமம் 27:1-11 மற்றும் 36:1-12ல் சொத்தை பற்றியதான சுவாரஸ்யமான ஒரு கதை உண்டு. இன்று வரை குமாரத்திகள் நிலத்தை சுதந்தரிக்க முடியாது. செலோப்பியாத்தின் நான்கு குமாரத்திகளும் தங்கள் தகப்பனுடைய நிலத்தில் தங்களுக்கு வரவேண்டிய பங்கு நிராக்கரிக்கப்படுவதை எதிர்த்தனர். தங்கள் விண்ணப்பத்தை மோசேயிடம் கொண்டு வந்தனர், அவன் அதை கர்த்தரிடம் எடுத்து சென்றான். அந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அக்கால சட்ட முறையே மாற்றப்பட வழி வகுத்தது. குடும்பத்திலும் விசுவாச சமுதயாத்திலும் அவரது இடம் காக்கப்பட வேண்டிய பரிசுத்தமான இடம், கர்த்தர் அதனை கௌரவிக்கிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்து இன்று வரை, நிலம் மிக முக்கியமான செல்வமாக கருதப்படுகிறது. ஆனால் காணக்கூடிய பொருளான, நிலம் போன்றவை மட்டும் நமது சுதந்திரம் அல்ல. சில வேளைகளில், கிடைக்கப்பெற்ற விருதுகள் மற்றும் சாதனைகள் பின் வருபவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இதை தாக்க கூடியவை ஆளுமை, வாய்ப்புகள் மற்றும் தலைமைத்துவ திறன்கள். தலைமைத்துவம் பின் வரும் நபருக்கு அல்லது தலைமுறைக்கு கொடுக்கப்படும்போது, அங்கு ஒரு பரிசுத்த ஸ்தலம் உருவாக்கப்படுகிறது. தலைமைத்துவத்தில் இருப்பவர் அதை ஒப்படைப்பது என்பது ஒரு மரியாதைக்குரிய, கௌரவத்துக்குரிய செயல். அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்வது ஒரு தாழ்மையான, களிப்பான வாய்ப்பு.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் செல்லும்போது, மோசே எபிரெயரை நடத்தும் தனது தலைமைத்துவத்தை யோசுவாவிடம் கொடுத்தான். எண்ணாகமம் 27:18-23 மீண்டும் வாசிக்கவும். மோசேயும் யோசுவாவும் கோத்திர தலைவர்கள், ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல ஆனால் கர்த்தரால் நியமிக்கப்பட்டவர்கள். யோசுவா ஜனங்களின் நம்பிக்கையை பெறவேண்டும் என்று மோசே இந்த சடங்கை ஜனங்களுக்கு முன்பாக நடத்தினான். இதேபோல் எலியாவுக்கும் எலிசாவுக்கும் இடையே தலைமைத்துவ மாற்றம் நடந்தது. இந்த இருவரும் எபிரெய தீர்க்கதரிசிகள். இவர்கள் இராஜாக்கள் மற்றும் இராஜாத்திகள், இராஜ பரம்பரை மற்றும் இராணுவ அதிகாரம் போன்ற சூழலில் ஆவிக்குரிய தலைமைத்துவம் கொடுத்தனர். எலியா தனது முன்னோடியின் ஆவியில் ‘‘இரட்டிப்பான பாகத்தை’’ கேட்டான். அந்த பரிசுத்தமான தருணத்தில், தலைமைத்துவ சால்வை, நேரடியாக, அடையாளப்பூர்வமாக மற்றும் அற்புதமாக பின் வருபவருக்கு வழங்கப்பட்டது.

‘‘உலகத்தின் முடிவு பரியந்தம்’’ சீஷர்கள் பிறரோடு பகிர்ந்துக்கொள்ளத்தக்கதாக, இயேசு தனது தலைமைத்துவத்தையும் ஊழியத்தையும் பரிசுத்த நம்பிக்கையோடு பகிர்ந்துக்கொண்டார். அவர் சீஷர்களோடு இருந்த சமயம், அவர்களுக்கு போதனைகள் மற்றும் அவரோடிருந்த அனுபவங்களையும் கொடுத்தார், அவர் மரித்து உயிர்த்தெழுந்த பின், அவர்களுக்கு பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியைக் கொடுத்தார். தனது தாய் மற்றும் பாட்டியின் வழி வந்த குடும்ப பூர்வீகத்தால் தீமோத்தேயுவுக்கு பவுல் சிறப்பு கவனத்தை கொடுத்தார். தங்கள் முன் வந்தவர்களோடு சேர்ந்து இவர்களும் விசுவாச மற்றும் கிரியைகளுக்காக அங்கீகரிக்கப்படுகிறார்கள். பல பங்களிப்புகள் குறிப்பிடப்படாமல் இருக்கலாம், ஆனால் நாம் இன்று நிற்பது அவர்கள் கட்டிய அஸ்திபாரத்தில்தான், நாம் எதிர்காலத்தில் நமக்கு பின் வருபவர்களுக்காக மேலும் அதை தொடர்ந்து கட்டுவோம். நமது கிறிஸ்துவ விசுவாசத்துக்கு, நமது சபைக்கு, மெதடிஸ்ட் பெண்களுக்கு மற்றும் நமது குடும்பங்களுக்கு இது உண்மையாயிருக்கிறது. லூக்கா 8:1-3ல், பெண்கள் இயேசுவோடு பயணித்து, அவருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் தங்கள் ‘‘திராணிக்கு மேலாக’’ ஊழியம் செய்தார்கள். இதுதான் மெதடிஸ்ட் பெண்களின் மரபு, பல நூற்றாண்டுகளான பெண்களின் மரபு. பெண்கள் உடன் வருவார்கள், ஆதரவு கொடுப்பார்கள், வளர்ப்பார்கள், கொடுப்பார்கள், ஜெபித்து ஊழியம் செய்வார்கள், போதிப்பார்கள், வழி நடத்தி செயல்படுத்துவார்கள். பெண்கள் தங்கள் விசுவாசத்தை பல வழிகளில் வாழ்ந்து காண்பிப்பார்கள், பெரும்பாலும் எந்தவொரு அறிவிப்பும் இன்றி. இதுதான் விசுவாச பெண்களின் சுவடு, மெதடிஸ்ட் பெண்களாகிய நீங்களும் நானும். நாம் வாழ்வது பரிசுத்தமான சுவட்டில், நமது விசுவாசத்தை கொண்டு, காணப்பட்டாலும் காணப்படாவிட்டாலும், வரலாற்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து எதிர்காலத்துக்குள் கடந்து செல்வோம்.

விவாதிக்க:

1. தேவனுடைய பிரசன்னத்தையும் செயல்களையும் நமது பாரம்பரியத்தில் எவ்வாறு நாம் காண்கிறோம்?
2. அது எப்படி நம்மை மாற்ற முடியும்? நீங்கள் எவ்வாறு நினைவுகூறப்பட நீங்கள் விரும்புகிறீர்கள்?

நாள் 4:

தலைப்பு: துக்கம் மற்றும் நம்பிக்கையின் பரிசுத்த ஸ்தலம்

நோக்கம்: நமது சொந்த வாழ்க்கையிலும், மற்றவர்களோடும், வேதனைகள் மற்றும் விரக்தியின் மத்தியிலும் நம்பிக்கையின் பரிசுத்த ஸ்தலத்தை கண்டடைதல்.

வேத வாசிப்பு: மத்தேயு 27:55-56 மாற்கு 15:40-41,47 லூக்கா 23:26-31, 46-49, 55-56

தியானம்:

இன்றைய வேத வசனம் இயேசுவோடு பிரயாணித்த பெண்களின் வேதனையை நினைவூட்டுகிறது, அவர் சிலுவையில் அறையப்பட்டதை பார்த்தனர், அவர் உடலை அடக்கம் செய்வதற்கான ஆயத்தங்களை பார்த்தனர், அவரை கல்லறையில் வைத்ததை பார்த்தனர். அந்த பெண்கள் இயேசு கல்லறையில் வைக்கப்பட்டதை பார்த்தனர், ஆனால் தூரத்திலிருந்துதான் கவனித்தனர் என்று மாற்கும் லூக்காவும் கூறுகிறார்கள்.
லூக்கா சற்று அருகில் சென்று, நமக்கு அந்த பெண்களின் வேதனையை காண்பிக்கிறார். லூக்கா குறிப்பாக, அந்த பெண்கள் தங்கள் மார்பை அடித்துக்கொண்டு கதறினார்கள் என்கிறார். இது வலுவான செய்கை, பார்க்க சங்கடமான காரியம், ஆனால் அவர்கள் கடந்து வந்த தருணத்திற்கு அதுதான் ஏற்ற மறுமொழி. ஓய்வு நாளானதால், அடக்கத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைவெளி இருந்தது.
- மரியாளின் மனநிலை அந்த நேரத்தில் எவ்வாறு இருந்திருக்கும்? அவள் தனது மகன் மரித்து போன காட்சியை அப்பொழுதுதான் காண்கிறாள்.
- அந்த தருணம் சீஷர்களுக்கு எவ்வாறு இருந்திருக்கும்? அவர்கள் இயேசுவோடு பயணித்தவர்கள், அவரோடு வாழ்ந்தவர்கள், மூன்று வருடங்களாக அவரிடமிருந்து கற்றுக்கொண்டவர்கள். நம்பிக்கை துரோகம் செய்த யூதாஸின் வேதனை மிக பெரிது, அவன் தன் உயிரையே மாய்த்துக்கொண்டான்.
- அவரைப் பின்பற்றின அநேகருக்கு எப்படியிருந்திருக்கும், கடந்த வாரம்தான் கூடி மரக்கிளைகளை வழியிலே பரப்பி ஆர்ப்பரித்த திரளான ஜனங்களுக்கு? அவர் அநேகரை சுகப்படுத்தியிருக்கிறார், தேவனுடைய அன்பை காண்பித்தும் போதித்தும் இருக்கிறார், அவர்களது தேவைகளை சந்தித்திருக்கிறார்.

தங்களுடைய நண்பரை இழந்த, சமய போதகரை இழந்த, தங்கள் நம்பிக்கையை இழந்த சீஷர்களை, ஸ்திரீகளை மற்றும் அநேகரை நாம் இங்கு காணலாம். இறப்புக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையே இடைவெளி உண்டு, இதில் இழப்பின் வேதனை உண்டு, இது பல வழிகளில் அனுபவிக்கப்படுகிறது. இந்த பரிசுத்த இடத்தில், தேவனுடைய ஆவி நம்மை அன்பால் அணைக்க மற்றும் தேற்ற வருகிறார், அவருடைய பிரசன்னம் நமது வலிகளை மட்டும் எடுத்துப்போடுவது மட்டுமல்லாமல் நமக்கு நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கொடுக்கிறது. இதை நாம் அனுபவிக்க முடியாமல் இருக்கலாம், காரணம் ஜனங்கள் தங்களுக்கு அன்பானவர்களை இழக்கும்போது அவர்கள் ஆண்டவரிடமிருந்து தொலைவில் இருப்பதுபோல் உணருகிறார்கள், ஆனால் முடிவில்லா நமது இரட்சகர், மரித்தோரிலிருந்து உயிர்த்தவர், வாழ்க்கை முடியவில்லை, வருங்காலத்தில் தேவனோடு நமக்கு நித்தியம் உண்டு, என்று நமக்கு நம்பிக்கை கொடுக்கிறார்.
இந்த பரிசுத்தமான துக்க வேளையில், வார்த்தையில்லா ஜெபத்தால் நம்மை தேவனிடத்தில் ஒப்படைக்க வேண்டும், அதன் மூலம் ரோமர் 8:25-27ன் படி தேவ ஆவியானவர் நமக்காக ஜெபம் செய்ய நாம் வழி வகுக்கிறோம்.
ஜெபத்தில்: ரோமர் 12:12. வேத வசனத்தில்: ரோமர் 15:4. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில்: ரோமர் 15:13. வருங்காலத்தில் தேவனுடைய திட்டத்தில்: எரேமியா 29:11
துயரத்தில் இருப்பவர்களுக்குரிய வாக்குத்தத்தங்கள் இவைகள், ஆண்டவருடைய பிரசன்னத்துக்குரிய வாக்குத்தத்தம், பிறர் மூலமாக இது நமக்கு வரும், அல்லது இயற்கை மூலம் வரும், சில வேளைகளில் எதிர்பார்க்காத இடங்களில் வரும். எங்கிருந்து உதவி வந்தாலும், கிறிஸ்தவர்களாகிய நாம், உயிர்தெழுதலில் விசுவாசமுள்ளவர்களாகையால் நாம் நம்பிக்கையை தெரிந்துக்கொள்ளலாம். நாம் ஈஸ்டர் ஜனங்கள்! நாம் இந்த பண்டிகையை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிறோம், காலியான கல்லறையை பார்க்க வருகிறவர்கள் போல. அவர் இங்கு இல்லை. அவர் சொன்னதுபோல அவர் உயிர்த்தெழுந்தார் (மாற்கு 16:6-7). இப்பொழுது, போய் நற்செய்தியை பகிர்ந்துக்கொள்ளுங்கள், நம்பிக்கை உண்டு!

விவாதிக்க:

1. நம்பிக்கையின் பரிசுத்த ஸ்தலத்தை எங்கு நீங்கள் காண்கிறீர்கள்?
2. உங்களுக்கு சமாதானத்தையும் ஆறுதலையும் கொடுக்கும் இடம் அல்லது மக்கள் அல்லது வேத வசனத்திலிருந்து பகுதிகள் உண்டா?
3. அன்புக்குரிய யாராவது இறந்துவிட்டால், உங்கள் உணர்ச்சிகள் எவ்வாறு இருக்கும் என வார்த்தையில் பகிர்ந்துகொள்ளுங்கள்.

நாள் 5:

தலைப்பு: வளர்ப்பின் பரிசுத்த ஸ்தலம்

நோக்கம்: உலகத்தின் சமாதானத்துக்கும் நீதிக்கும் நமது பங்கை பற்றி கற்றுக்கொள்ளவும் அதை வளர்க்கவும் ஒரு பரிசுத்த ஸ்தலத்தை கண்டடைதல்.

வேத வாசிப்பு: லூக்கா 2:41-52 ரூத் 1:6-18

தியானம்:
ஆரம்பத்திலிருந்தே இயேசுவின் தாய் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளார்: வீட்டை விட்டு வெளியே இருக்கும்போது குறைநிறைந்த சூழலில் பிரசவித்து, கொலை மிரட்டலினால் குழந்தையின் முதல் வருட வாழ்க்கையில் ஓடினது, வேறு தேசத்தில் அகதிகளாக வாழ்ந்தது. நமது நாட்களிலும் அநேகர் இத்தகைய சவால்களை சந்திக்கிறோம்: யுத்தம் மற்றும் இயற்கை பேரிடர்கள். இந்நாட்களில் நாம் இந்த ஜனங்களின் தேவைகளை சந்திக்க முயலும் போது, பரிசுத்த தாய்மை என்ற ஸ்தலத்தை உருவாக்குகிறோம்.

இயேசு 12 வயதாயிருக்கும் போது, அவருடைய குடும்பத்தார் எருசலேமுக்கு தங்கள் வருடாந்திர பயணத்தை மேற்கொண்டனர், ஆனால் திரும்பும்போது அவரைக் காணவில்லை. பல நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் மத்தியில் அவர் இருப்பார் என நினைத்தனர். ஒரு கட்டத்தில், இயேசுவை காணவில்லை என உணர்ந்தனர், அவரைத் தேடி திரும்பவும் எருசலேமுக்கு சென்றனர். இயேசுவைக் காணாததால், அவர்களது அக்கரையையும் மற்றும் பயத்தையும் கூட உணரமுடிகிறது. இயேசுவை கண்டுபிடிக்க அவர்களுக்கு மூன்று நாள் பிடித்தது, தேவாலயத்தில் போதகர்களிடம் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார். பெரும்பாலான பெற்றோர்களைப் போல் அவரது இந்த செயலை அவர்கள் கண்டித்தனர். ‘‘என் பிதாவுக்கு அடுத்தவைகளில் நான் இருக்க வேண்டும்’’ என அவர் மறுமொழி கொடுத்தார். அந்த தருணத்தில் அவருடைய தாயார், காணாமல் போன மகனைத் தேடுவதில் இருந்து, அவரது ‘‘விசேஷித்த’’ நிலைக்கான அழுத்தத்தை உணர ஆரம்பிக்கிறார்.

கானா ஊர் கலியாணத்தில் இயேசுவும் அவர் தாயாரும் சம்பாஷித்தது அடுத்ததாக குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த கலியாணத்தில் திராட்சரசம் குறைவுபடுகிறது, மரியாள் இதில் உதவும்படியாக இயேசுவைக் கேட்கிறாள். அவர் இந்த காரியத்தை செய்வார் என அவள் உறுதியாக நம்பி, வேலைக்காரரை நோக்கி இயேசு சொல்லும்படி செய்யுங்கள் என கூறினாள். இது சாதாரணமாக தோன்றலாம், ஆனால் மற்றவர்களின் நலனை கவனித்து ஆதரிப்பது என்பது தாய்மையின் ஒரு தன்மை.

ரூத் புத்தகத்தில் குறிப்பாக ரூத் 1:6-18ல், ஒருவருக்கொருவர் தாயாயிருந்தவர்களை குறித்து காணலாம். முதல் அதிகாரத்தில், நகோமி விதவையாகிறாள், அவளது மகன்களும் இறந்து போகிறார்கள். அவள் தன் சொந்த தேசத்துக்கு திரும்ப ஆயத்தமாகிறாள். அவளது மருமகள்களில் ஒருத்தி அங்கேயே இருக்க முடிவு செய்கிறாள், ஆனால் ரூத் நகோமியை விட்டுப்பிரிய மறுக்கிறாள். அவர்களின் இந்த அன்பு மற்றும் ஆதரவின் பரிமாற்றம் அழகான உதாரணம். நகோமி தன் சொந்த ஊருக்கு செல்ல துணையாய் வந்ததால் ரூத் அங்கு ஒரு ‘‘தாய்மையின்’’ பரிசுத்த ஸ்தலத்தை உருவாக்குகிறாள். அவர்கள் அங்கு வந்து சேர்ந்ததும், தனது மாமியாருக்கு உதவும்படியாக கதிர்களை பொறுக்கும் வேலைக்கு போகிறாள். அத்தேசத்தில் இது அவளுக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தியது, நகோமியின் உறவினர் போவாசின் கவனத்தை இது ஈர்த்தது. போவாசின் பாதுகாப்பை பெற்றுக்கொள்ள அவனுடைய கவனத்தை ஈர்க்க ரூத்திற்கு நகோமி ஆலோசனை கொடுக்கிறாள். பின்னர் ரூத்தும் போவாசும் திருமணம் செய்கின்றனர், அவர்கள் மகன் மூலம் இயேசுவின் வம்சத்திற்கு ஒரு பகுதியாயினர். இந்த இரண்டு பெண்களும், திருமணத்தால் உறவினராகின்றனர், ஆனால் கலாச்சாரத்திலும் விசுவாசத்திலும் வேறுபடுகின்றனர், ஒன்றிணைந்து தாய்மையின் பரிசுத்த ஸ்தலத்தை கண்டடைகின்றனர். ஒருவருக்கொருவர் கடன்படாவிட்டாலும், அவர்கள் ஒருவரோடொருவர் விசுவாசம் மற்றும் அன்பை அனுபவித்தனர்.
எல்லா கூட்ட மக்களும் தாய் போல வளர்க்க முடியும். இது பெண்ணோடு சம்பந்தப்படுத்தப்பட்டாலும், இது ஒரு பாலார் மட்டும் செய்யக்கூடியது இல்லை. பெண்களிடையேயும் கூட, வளர்ப்பு என்பது தாயான பெண்களிடையே, தாயாகாத பெண்களிடையே, முதிர் வயதான மற்றும் இள வயதான பெண்களிடையே காணப்படுகிறது. வளர்ப்பு ஆண்களிடமிருந்தும் நிச்சயமாக வருகிறது. எல்லோருக்கும் ஏதாவது ஒரு கட்டத்தில் வளர்ப்பு தேவைப்படுகிறது, நாம் எல்லோரும் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் அல்லது எல்லா வயதினருக்கும் வளர்ப்பாளர்களாகவும் அமைகிறோம். ஒருவரையொருவர் கவனிப்பதில், நாம் தாய்மையின் பரிசுத்த ஸ்தலத்தை அனுபவிக்கிறோம், இதன் மூலம் நாம் தேவனுடைய அன்பை விளங்கிக்கொள்ள முடிகிறது.

விவாதிக்க:
1. தேவனுடைய வளர்ப்பை நீங்கள் அனுபவித்துள்ளீர்களா? பிறரின் மூலம் தேவனுடைய வளர்ப்பை நீங்கள் உணர்ந்துள்ளீர்களா?
2. நீங்கள் எப்படி வளர்க்கிறீர்கள்? யாருக்கு உங்களுடைய வளர்ப்பு தேவைப்படுகிறது?
3. உங்கள் விசுவாசத்தை வளர்த்த ஒரு பெண்ணை குறிப்பிடவும்.

நாள் 6:

தலைப்பு: ஜெபத்தின் பரிசுத்த ஸ்தலம்

நோக்கம்:
தேவனோடு கூட ஜெபத்திலும் வேத ஆராய்ச்சியிலும் தேவனை சந்திக்க ஒரு ஒப்பந்தம் செய்தல், இயேசுவின் மறுரூபமாகுதல், மெதடிஸ்ட் பெண்களாகிய நம்மை எப்படி நமது சமுதாய தேவைக்கேற்றபடி மறுமொழி கொடுக்க அழைக்கிறது.

வேத வாசிப்பு: லூக்கா 9:28-36 மத்தேயு 6:5-15

தியானம்:
சில கேள்விகள் கேட்டு பதிலளிக்க உற்சாகமூட்டுங்கள்: “நீங்கள் எவ்வாறு ஜெபிக்க கற்றுக்கொண்டீர்கள்?” அல்லது “ஜெபிக்க நீங்கள் எங்கு கற்றுக்கொண்டீர்கள்?”

நாம் தேவனோடு இணைக்கப்பட ஜெபம் ஒரு பரிசுத்த ஸ்தலமாக அமைகிறது. ஜெபம் ஆண்டவரோடு பேசுவது, பேசுவதும் கேட்பதும். இந்த வேளையில்தான் மறுரூபமாகுதல் நடைபெற முடியும். தேவனுடைய வழிநடத்துதல் கொடுக்கப்பட்டிருக்கிறது, தேவைகள் பகிரப்பட்டிருக்கின்றன, பொறுப்புகள் கடினமாகின்றன. தனி வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் இது உண்மையே. தேவனோடு கூட நமது தனிப்பட்ட நேரமும், நமது பொது வாழ்க்கையும், அவரோடு ஒளிவின்றி பேசுவதற்கான நேரத்தைக் கொண்டிருக்க வேண்டும், நமது ஆழ்ந்த தேவைகளையும் நம்பிக்கைகளையும் சொல்லக்கூடிய பரிசுத்த ஸ்தலமாக அது அமைய வேண்டும்.
வேதம் பல விதமான ஜெபங்களையும், ஜெபத்திற்கான விதிகளையும் கூறுகிறது. கிறிஸ்தவர்களாக, நாம் இயேசுவை முதலாவது நோக்க வேண்டும். அவரது சீஷர்கள் அவரிடம் எப்படி ஜெபிப்பது என்று கேட்டார்கள், இரண்டு சுவிசேஷங்கள் இயேசு இதற்கு கொடுத்த மறுமொழியை கர்த்தருடைய ஜெபத்தின் மூலம் குறிப்பிட்டிருகின்றன. இயேசு ஒரு நல்ல எடுத்துக்காட்டை கொடுக்கிறார், இதை நாம் சபைகளில், பிற கூட்டங்களில் மற்றும் தேவனோடு கூட நமது தனிப்பட்ட நேரத்திலும் திரும்ப திரும்ப கூறுகிறோம்.
இயேசு பெரும்பாலான சமயத்தை ஜெபத்தில் கழித்தார். சீஷர்களை தெரிந்தெடுப்பதற்கு முன் இயேசு இரவு முழுவதும் ஜெபித்தார் (லூக்கா 6:12-13). கெத்சமனே தோட்டத்தில் தன்னை கைது செய்வதற்கு முந்தைய இரவு இயேசு அதிகமாக ஜெபித்தார். (மத்தேயு 26:36-46, மாற்கு 14:32-42).
இயேசுவின் சீஷர்கள் அவரோடுகூட தோட்டத்திற்கு வந்தனர், அவர்களில் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை மட்டும் அழைத்துச்சென்று, தனக்காக ஜெபிக்க சொன்னார். மாற்கு 14:35 கூறுகிறது, “அவர் தரையிலே விழுந்து, வேண்டிக்கொண்டார்” என்று, இது போராட்டத்திற்கான ஜெபம். இயேசு தன் மரணத்தைப் பற்றி வியாகுலப்பட்டு, பிதாவின் வழிநடத்துதலை கேட்டார் என்று கூறப்படுகிறது. அவர் திரும்ப வந்தபோது, சீஷர்கள் நித்திரையாய் இருப்பதைக் கண்டு, அவர்களை விழித்திருக்க சொல்கிறார், ஆனால் அவர்கள் திரும்பவும் நித்திரைக்கு செல்கிறார்கள். ஜெபமாகிய பரிசுத்த ஸ்தலத்தில், இயேசு வழிகாட்டுதலை நாடுகிறார், அதைக் கண்டடையவும் செய்கிறார்.
இயேசுவின் மறுரூபமாகுதலைப் பற்றி மூன்று சுவிசேஷங்கள் நமக்கு கூறுகின்றன. இது ஒரு மிக வித்தியாசமான நிகழ்வு. இயேசு ஜெபம் செய்துகொண்டிருக்கும் போது, அவரது வெளி தோற்றம் மாறியதாக லூக்கா குறிப்பிடுகிறான். ஜெபத்தின் மூலம் பிதாவை சந்திப்பதைப் பற்றி, இயேசுவின் உதாரணத்திலிருந்து காணலாம், பிதாவோடு கூட ஆயுள்கால தொடர்பு. ஜெபத்தின் பரிசுத்த ஸ்தலத்தில், இயேசு பிதாவை வல்லமையாக சந்தித்ததை சீஷர்களுக்கு காண்பிக்கிறார்.
ஜெபம் பரிசுத்த ஸ்தலத்தில் தேவனை சந்திக்க செய்து, நமது தனிப்பட்ட வாழ்க்கையில் ஆவிக்குரிய உறுமாற்றதை கொண்டுவருகிறது, விசுவாச கூட்டத்தாரோடு சேர்ந்து. நாம் ஜெபிக்கும்படியாக கூடும்போது, அப்போஸ்தலர் 4:31ன் படி வல்லமை வருகிறது. நம்மை சுற்றியிருக்கும் உலகுக்கு சாட்சிகளாய் இருப்பதற்கு, துணிச்சல் நமக்கு வருகிறது.

விவாதிக்க:
1. தேவனோடு நீங்கள் எவ்வாறு பேசுகிறீர்கள் - ஜெபித்தல் மற்றும் கேட்பது?
2. சபை இதை எவ்வாறு செய்கிறது?
3. நாம் எல்லோரும் இதை மேம்பட எவ்வாறு செய்ய முடியும்?

நாள் 7:

தலைப்பு: சமுதாயத்தின் பரிசுத்த ஸ்தலம்

நோக்கம்:
மெதடிஸ்ட் பெண்கள் எவ்வாறு சமுதாயத்தின் பரிசுத்த ஸ்தலத்தை உருவாக்கி, சமுதாயத்தில் கேட்கப்படாதவர்களின் தேவைகளுக்கு மறுமொழி கொடுப்பது.

வேத வாசிப்பு: உபாகமம் 15:7 அப்போஸ்தலர் 4:32 1 கொரிந்தியர் 12:7

தியானம்:
ஆதி காலத்தில், உடமைகள் பொதுவாக பகிரப்பட்டு தேவைகள் சந்திக்கப்பட்டன. அது நமக்கு நல் உதாரணமாக, சீஷத்துவத்தில் சமுதாயத்தின் பரிசுத்த ஸ்தலம் என்றதின் அர்த்தத்தை வெளிப்படுத்தியது. பொது நலத்துக்கும், மனித வாழ்க்கையின் அடிப்படை தேவைக்கும் கவனம் செலுத்தப்பட்டது. இயேசு தனது சீஷர்களுக்கு ஒரு பரிசுத்த ஸதலத்தை உண்டாக்கினார். இயேசுவின் போதனையை கேட்டுக்கொண்டும், அவரின் அற்புதங்களை பார்த்துக்கொண்டும், அவர்கள் குழுவாக பயணம்செய்தார்கள். அவரது தியாக மரணம், அவர்கள் மீது அவர் வைத்த அன்பை வெளிப்படுத்தியது. "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவனிடத்திலுமில்லை" (யோவான் 15:12-17) என்ற வசனம் அவரின் போதனையின் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது.

சீஷர்கள் ஒருமித்து பயணித்ததின் காரணமாக அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கக் கற்றுக்கொண்டனர், இயேசுவைப் பிரிந்த பின் இது அவர்களுக்கு பெலத்தைக் கொடுத்தது. ஆதி திருச்சபையில் குறிப்பாக எருசலேமில் சீஷர்கள் ஒன்றிணைந்து, போதிப்பதற்கும் இயேசுவின் வார்த்தைகளை அறிக்கையிடுவதற்கும் தங்களை அர்ப்பணித்தார்கள். சமுதாயத்தில் பல கருத்து வேறுபாடுகள் எழுந்தன, புற ஜாதியாரின் விருத்த சேதனம், பகிர்வதில் சம பங்கு, மற்றும் பல. அப்போஸ்தலர் 6:1-7 ஒன்றைக் காணலாம். சில விதவைகளின் தேவைகள் மட்டும் சந்திக்கப்பட்டன, ஆகவே சமுதாயம் அந்த பொறுப்பை ஸ்தேவானைப் போல நம்பிக்கையான தலைவர்களிடம் ஒப்படைத்தது, இதன் மூலம் இயேசுவிடம் நெருக்கமானவர்கள் போதிப்பதில் கவனம் செலுத்த முடிந்தது.
சமுதாயத்தின் பரிசுத்த ஸ்தலத்துக்கு அன்பும் நீதியும் தேவை.
புதிதாக மாறினவர்கள், விசுவாசிகள் எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர், தலைவனாக பவுல் உருவானது விசுவாசிகளின் ஐக்கியத்தை விரிவாக்கினது, மேலும் புதிய சபைகளின் வளர்ச்சிக்கு சமுதாயத்தின் பரிசுத்த ஸ்தலத்தை வழங்கியது. புற ஜாதியார்கள் சேர்த்துக்கொள்ளப்படத்தக்கதாக தடைகள் அகற்றப்பட்டன.
அப்போஸ்தலர் 18:1-4, 24-28 பவுலுக்கும் இத்தாலியாவிலிருந்து அகதிகளாக வந்திருந்த ஒரு தம்பதிக்கும் உள்ள உறவை பார்க்கிறோம். பவுலைப் போலவே அவர்கள் கூடாரம் செய்கிறவர்கள், கொரிந்தில் வந்து வாழ்கின்றனர். தேவாலயத்தில் பவுல் பேசினதைக் கேட்டார்கள், அவன் போனதும் அவர்கள் வேறு ஒரு ஆவிக்குரிய தலைவனான அப்பொல்லோவின் ஊழியத்தில் உதவியாயிருந்தனர். அப்பொல்லோ அலெக்சந்திரியாவிலிருந்து வந்தவன், அவன் வேதாகமங்களில் வல்லவன். பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அவனை சேர்த்துக்கொண்டு அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை விவரித்துச் காண்பித்தார்கள், பின்னர் அவன் கிறிஸ்துவ விசுவாசத்துக்கு மிக வல்லமையாக ஊழியம் செய்தான். அவர்கள் சமுதாயத்தின் பரிசுத்தத ஸ்தலத்தைப் பயன்படுத்தி அப்பொல்லோவுக்கு உதவியாயிருந்து, சுவிசேஷத்தின் செய்தியைப் பரவ செய்தனர்.

எஸ்தர் தனக்கு ஆபத்து வரலாம் என தெரிந்தும், தனது சமுதாயத்துக்காக தலையிட்டாள். ரூத் தனது மாமியார் நகோமியை விட்டு பிரியமாட்டேன் என்றாள், நகோமி தன் சொந்த தேசத்துக்கு திரும்பும் போதும்கூட அவளுடன் சேர்ந்து செல்ல தீர்மானித்தாள் (ரூத் 1:16-18), மேலும் நகோமியின் சமுதாயத்தில் அவளும் ஒரு அங்கமாகிறாள்.
இந்த ஒவ்வொருவரும் சமுதாயத்தின் பரிசுத்த ஸ்தலத்தை கண்டுகொண்டனர், அந்த சமுதாயத்தின் நலனுக்காக தங்களை அர்ப்பணித்தார்கள். அவர்களின் இந்த முடிவுகள், அவர்களது விசுவாசத்தை அதிகரித்தது, மேலும் தேவனுடைய திட்டங்கள் அவர்கள் கூட்டத்தில், குடும்பத்தில் மற்றும் ஜனங்களிடத்தில் நிறைவேறச் செய்தது. பிறருடனான உறவுமுறையில், தேவன் சமுதாயத்தின் பரிசுத்த ஸ்தலத்தை வைத்ததுள்ளார். பிற ஜனங்களை நாம் சந்திக்கும்போது, அது நம்முள் வைக்கப்பட்டுள்ள தேவனுடைய சாயலை நாம் வாழ்ந்துக்காட்ட உதவியாயிருக்கிறது. அது கிருபையினாலும் அன்பினாலும் பூரணப்பட்ட ஒரு வாழ்க்கை. அது விசுவாசத்தினாலும் நம்பிக்கையினாலும் நிறம்பின ஒரு வாழ்க்கை. அது நீதியிலும் சேவையிலும் செழிப்பான ஒரு வாழ்க்கை. அது மன்னிப்பினாலும் சுகத்தினாலும் செல்வமான ஒரு வாழ்க்கை.

விவாதிக்க:

1. சமுதாயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் நீங்கள் எவ்வாறு ஜீவிக்கிறீர்கள்?
2. கிறிஸ்துவின் சரீரமான விசுவாச சமுதாயம், ஒன்றிணைந்து வாழும்படியாக எந்த வகையில் செயல்படுகிறது?